[1979 அக்டோபர் 29]

வந்திருக்கிறது. அமைச்சரவர்கள், அப்படி இல்லவே இல்லை, அப்படிப்பட்ட நிலைமையே இல்லை என்று கூறுவது விசித்திரமாக இருக்கிறது. அப்படிப்பட்ட கண்டு பிடிப்பு வந்த பிறகு கூட தொடர்ந்து வயிற்று வலி இருக்கிறது. அந்தப் பகுதியில் சுமார் 1 இலட்சம் மக்கள் வசிக்கிறார்கள். 17,000 தொழிலாளர்களும், அவர்கள் குடும்பங்களும், வியாபாரிகளும் அங்கு இருக்கிறார்கள். அவர்களில் ஏராளமான பேர் வயிற்று வலியினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அதன்மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே சொன்னதுதான் சரி. அது பாதிக்காது என்று முடிவு செய்து விட்டார்கள்.

காளப்பநாயக்கன்பட்டிக்குக் குடிநீர் வசதி.

*வினா எண் 33—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் காளப்பநாயக்கன்பட்டிக்குக் குடிநீர் வழங்குவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) அத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ? அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. நடைபெற்றுவரும் கள ஆய்வுப்பணிகள் முடிந்த பிறகே திட்டம் செயல்படுத்தக்கூடியதா என்ற முடிவு தெரியும்.

பல்லவன் போக்குவரத்து விரைவுப் பேருந்துகள்.

*வினா எண் 34—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்து விரைவு வண்டியிலும், மற்றும் நீண்ட தூரம் செல்லும் வண்டிகளிலும் லக்கேஜ்-கேரியர் அவசியம் இருக்கவேண்டும் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

[1979 அக்டோபர் 29

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, விரைவு மற்றும் நெடுந்தூர பேருந்துகள் அனைத்திலும் லக்கேஜ் கேரியர்கள் இருக்க வேண்டியது ஓர் அடிப்படை தேவை யாகும். அந்த அடிப்படை தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் இந்த வசதிகள் எல்லா பேருந்துகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், 1976ம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட பேருந்துகளில் மட்டும் இந்த வசதிகள் இல்லாமல் இருந்தது. அவைகளிலும் ஏற்பாடு செய்வதற்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்பாடு செய்ததற்கு நன்றி. மற்ற விரைவு வண்டிகளிலும் உடனடியாக இதுபோன்ற வசதிகள் செய்து தர ஏற்பாடு செய்யப் படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து பேருந்துகளிலும் இந்த வசதிகள் செய்து தர உத்தரவிடப்பட்டு நடைமுறையில் மேற்கொள்ளப்பட்டிருக் கிறது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல்லவன் போக்குவரத்து பஸ்கள் தவிர, மற்ற எல்லா கார்ப்ப ரேஷன் பஸ்களும் கிராமங்களுக்கு 25 கிலோ மீட்டர் தூரம் வரை செல்கிறது. கிராமங்களிலிருந்து நகரத்திற்கு விவசாயப் பொருகள் வர வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தப் பஸ்களிலும் இப்படிப்பட்ட லக்கேஜ் கேரியர் வைப்பதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தில் இருந்து 25 கிலோ மீட்டர்வரை கிராமங் களுக்குச் செல்லும் பேருந்துகளிலும் லக்கேஜ் கேரியர் போன்ற வசதிகள் அமைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இனிமேல் வருங்காலத்தில் வரக் கூடிய பேருந்துகளில்கூட இப்படிப்பட்ட வசதிகள் செய்து தரப்படும். மேலும் தனியார் பஸ்களிலும் அந்த வசதிகள் செய்து தர வேண்டும் என்று உத்தர விடப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 58 மினி பஸ்கள் விடப்பட்டு பிரத்யேகமாக லக்கேஜ் கம்பாசஞ்ஜர் பஸ் என்ற அடிப்படையில் செல்ல வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, குறிப்பாக பாண்டிச்சேரி, டு கோயம்புத்தூர் செல்லும் பேருந்துகளில் சாய் மான வசதிகள் இல்லை. அதைக் கவனிக்க ஏற்பாடு செய்யப் படுமா ?

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார் என்று புரியவில்லை. மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தச் சாய்மான வசதிகள், அதாவது சீட்டிங் அட்ஜெஸ்மென்ட் சரி யில்லாமல் இருக்கிறது. அது கவனிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு, சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண எக்ஸ்பிரஸ் பேருந்துகளில் அத்தகைய சீட்டிங் அரேன்ஜ்மென்ட் செய்யப்படவில்லை. சொகுசு பஸ் களில், அதாவது டீலக்ஸ் பேருந்துகளில் அத்தகைய வசதி செய்யப்பட்டிருக்கிறது. படிப்படியாக, சாதாரண எக்ஸ்பிரஸ் பேருந்துகளில் எல்லாம் டிலக்ஸ் பேருந்துகளில் உள்ளது போல், அத்தகைய வசதி செய்து தர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட தூரப் பேருந்துகளில் 10, 15 மணி நேரம் பிரயாணம் செய்யவேண்டி இருப்பதால், ரயில், விமான சர்விஸ்களில் உள்ளது போல், இந்த நீண்டதூரப் பேருந்துகளிலும் உணவு பரிமாற வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, பேருந்துகளில் உணவு பரிமாறுவதற்குரிய திட்டம் ஒன்றும் இல்லை. ஆனால் எல்லாப் பேருந்துகளும் மோட்டல் அமைக்கப்பட்டிருக்கக் கூடிய இடத்தில் நிறுத்தி அங்கே அவைகள் மூலமாக தரமான உணவு வழங்க ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட் பட்டிருக்கிறது. விரைவில் பூர்த்தியாகிவிடும்.

திரு. க. மருதாசலம் : தவைலர் அவர்களே, தனியார் நடத்து கிற பேருந்துகளுக்கும் இப்படிப்பட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் அந்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதில்லை. அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு, சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது தனியார் பேருந்துகளில் கிராமப்புறத்தில் மக்கள் கொண்டு வருகிற லக்கேஜ் ஏற்ற மறுக்கிறார்கள் என்று சொல்வதாகக் கருதுகிறேன். உத்தரவை

நடைமுறைப்படுத்தாதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கிராம மக்கள் கொண்டு வரும் லக்கேஜ் ஏற்ற வேண்டும் என்று கடுமையான உத்தரவு போட்டிருக்கிறோம். இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். கிராம மக்கள் கொண்டு வரும் லக்கேஜக்கு கட்டணம் வாங்கிக் கொண்டு கட்டாயம் ஏற்றிக் கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்திருக்கிறோம்.

திரு. அ. செல்லப்பா : தலைவர் அவர்களே, பொதுவாக அரசின் விரைவுப் பேருந்துகளில் ஒரு சாதாரண பழுது ஏற்பட்டால் கூட அந்த பேருந்தை டிரைவர், கண்டக்டர் அந்த இடத்திலேயே போட்டு விடுகிறார்கள். அதனால் அந்த பேருந்துகளில் உள்ள பிராயாணிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் அந்தப் பேருந்துகளில் ஸ்பேர் பார்ட்ஸ், ஸ்பேனர் போன்ற கருவிகள் வைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு முன்னால் இருந்த சூழ்நிலையை சுட்டிக் காட்டுகிறார்கள் என்று கருதுகிறேன். இன்றைக்கு அனைத்து பேருந்துகளிலும் கண்டிப்பாக உபகரணங்கள் இருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. நான் அவ்வப்போது சோதனையிட்டு கண்டித்தும் இருக்கிறேன். எந்தப் பேருந்தில் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சின்ன சேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் சேலத்தில் காபி கொடுக்கிறார்கள். மற்ற போக்குவரத்துப் பேருந்துகளிலும் காபி வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இத்தகைய வசதியை விரிவுபடுத்துவதற்கில்லை. நான் ஏற்கெனவே சொன்னதுபோல் நடைமுறையில் நெடுந்தூர பேருந்துகள் மோட்டல்கள் அமைக்கப்பட்டுள்ள இடத்தில் நிறுத்தி அங்கே தரமான உணவு வழங்கவும், லேவட்டரி மற்ற வசதிகள் செய்து தரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9.40,]